வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய ஏழுமாத காலமாகியும் நடவடிக்கை எடுக்க ஆலோசனைகள் நடக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள்? மாநகராட்சி துரிதமாக கவனிக்க வேண்டிய இப்படிப்பட்ட குடிதண்ணீர், சாக்கடை போன்ற விஷயங்களில் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் விசேஷமாக முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கோயில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நினைப்பதைப் போல், அங்கே தண்ணீருக்குத் தட்டுப்பாடு இல்லாமல் இடைக்கால நிவாரணம் ஏற்பாடாகிவிட்டது. நிலையான நிவாரணமும் கிடைப்பதற்கு வேண்டிய திட்டத்தைச் சொல்லியிருக்கிறோம். அதன் பிரகாரம் நிலத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதி கூறிக் கொள்கிறேன்.

உதகமண்டலம் பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டம்.

* வினா எண். 332—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தை நான்கு பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியிலும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பகிர்மானக் குழாய்கள் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 110 லிட்டர் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா

1982 மார்ச் 3]

என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்த பார்சன்ஸ்வாலி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு சில வருடங்களாகவே நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதுதான் உதகமண்டலத்தில் இருக்கும்படியான குடிநீர்த் தட்டுப்பாட்டிற்குப் பிரதான காரணம் என்று சொல்லப்படுவது உண்மையா? அந்தத் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டு முதல் மழைக் குறைவின் காரணமாக கோடை மாதங்களில் உதகமண்டலம் நகரில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. எனவே பார்சன்ஸ் பள்ளத்தாக்கு திட்டம் 1969 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப் பெற்று 1975 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 4.5 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குமளவிற்கு நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் கோடை மாதங்களில் குடிநீர் வழங்குவதில் யாதொரு தடையும் ஏற்படக் கூடாது என்பதற்காக நிறைவேற்றப்பட்ட அவசர கால நடவடிக்கையாகும். எனினும் வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு நிறுவனத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க, அரசு பார்சன் பள்ளத்தாக்குத் திட்டத்தினின்று நாளொன்றுக்கு 2,275 மில்லியன் லிட்டர் குடிநீரைப் பாதுகாப்பு நிறுவனத்திற்கு வழங்க முடிவு செய்தது. இதன் காரணமாக பார்சன் பள்ளத்தாக்கு திட்டத்தினின்று உதகை நகரத்திற்குக் கிடைக்கக்கூடிய குடிநீரின் அளவு வெகுவாக குறைந்து விட்டது. மேலும் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் வறட்சி நிலைமையினால் வழங்குவதற்குரிய குடிநீரின் அளவு மிகவும் குறைந்ததின் காரணமாக தற்போதுள்ள குடிநீர் வழங்கு திட்டத்தினை மேம்பாடு செய்வதாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்குத்தான், தற்போதுள்ள குடிநீர் வழங்கு திட்டத்தினை மேம்பாடு செய்வதாக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் நடைபெற்ற பின்னர், அரசு நிர்வாக ஒப்புதல் அளித்த பின்னர் திட்டம் செயலாக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த பார்சன்ஸ் வாலி திட்டத்தை, ஆரம்பத்தில் போட்டபடி முழுவதும் உதகமண்டலம் நகரத்திற்குக் கிடைத்திருக்கும் பட்சத்தில், அதிலும் குறிப்பாக, இந்தியா முழுவதும் கோடைக்காலத்தில், ஏராளமான ஜனங்கள் வந்து சேரக்கூடிய அந்த இடத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்திருக்கும். இன்றைக்கு மோசமான நிலைமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு சொன்னார். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் காலையில் வேறு இடத்திற்கு அந்தத் தண்ணீரை டைவர்ட் பண்ணி

கொடுத்ததன் விளைவுதான் இப்பொழுது தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்து அங்கே முழுவதும் அந்தத் தண்ணீர் கிடைக்க, பார்சன்ஸ்வாலி திட்டத்தை அங்கேயே பயன்படுத்தி, மாற்றுத் திட்டத்தை வேறு ஒரு இடத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து ஒருவகையில் சரியானது. ஆனால், அரசு பார்சன் பள்ளத்தாக்கு திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2,275 மில்லியன் லிட்டர் குடிநீர் கொடுக்கக், பாதுகாப்பு நிறுவனத்திற்குத்தான் எனவே, பாதுகாப்பு நிறுவனத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்கள் என்று கருதவில்லை. ஆனால், நீர் கொடுக்கும் திட்டத்தை மேலும் மேம்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையாகும். அதை இந்த அரசு கவனிக்கிறது. மேம்பாடு திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறது, ஆவன செய்யப்படும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு படையினருக்குத் தண்ணீர் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஆனால், அதற்குத் தனி திட்டம் தயாரித்து, உதகை மக்கள் குடிதண்ணீருக்குப் படும் அவஸ்தையை நீக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்வி. இதற்கான பதிலும் ஏற்கனவே சொல்லி விட்டேன்.

TRUTH ALONE TRIUMPHS

சென்னம்பட்டியில் தீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.

* வினா எண். 333—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் அருப்புக்கோட்டை தொகுதி சென்னம்பட்டி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டி குண்டாற்றின் இரு கரைகளிலும் கால்வாய் ஏற்படுத்தி பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்